**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, GUDIYATTAM.**
**Case No.C.C.No.33/2018**

**DEPOSITION OF WITNESS FOR PW.1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | RESHMA | **Caste** | **BCM** |
| **Father / Husband Name** | **THAJUDDIN** | **Occupation** | **TEACHER** |
| **Village** | **DHNAMPET** | **Religion** | **MUSLIM** |
| **Taluk** | **GUDIYATHAM** | **Age** | **32** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.09.2022.**

## முதல் விசாரணை

1. நான் தற்போது பெங்களூருவில் ஆசிரியராக பணியாற்றி வருகிறேன். வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 04.03.2010 எனக்கும் ஆஜர் எதிரி தாஜீதின் என்பவருக்கும் சீனிவாசா கல்யாண மண்டபத்தில் திருமணம் நடந்தது. திருமணத்தின்போது எனக்கு 16 சவரன் நகையும், ஆஜர் எதிரிக்கு 2 சவரன் நகையும் மற்றும் ரொக்கம் ரூபாய் 2,00,000/-மும், இருசக்கர வாகனம் வாங்க ரூபாய் 50,000/- மும் ரொக்கமாக பணம் கொடுக்கப்பட்டது.

2. இதற்குபின்பு எனது கணவர் துபாய்க்கு சென்றார். பின்பு 19 மாதங்கள் கழித்து திரும்பி வந்தார். வந்தபிறகு மேலும் வரதட்சணையாக ரூபாய் 5,00,000/- டிராவல்ஸ் நிறுவனம் நடத்த எனது தந்தையிடம் பணம் வாங்கிக்கொண்டு வருமாறு கேட்டார்.

3. 08.09.2015 நானும் என்னுடன் எனது அண்ணன் அல்லாபகஷ் ஆகியோர் எதிரிகள் வீட்டிடம் சென்றோம். அப்போது எனது கணவர் ரூபாய் 5,00,000/- கொண்டு வரவேண்டும் என்று கூறினார். தவறும்பட்சத்தில் வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்யப்போவதாக என்னிடம் கூறினார். எனது தந்தை இதயநோயாளி என்பதால் என்னால் அவர்கள் கேட்ட பணத்தை கொடுக்க முடியவில்லை.

4. பின்பு நான் எனது தாயார் வீட்டிலேயே குடியிருந்தேன். பின்பு எனது கணவரான முதல் எதிரி வேறு பெண்ணை ஒரு திருமணம் செய்துவிட்டார் என்றும் அவர்களுக்கு ஒரு குழந்தை உள்ளது என்றும் கேள்விப்பட்டேன்.

5. பணம் கொண்டு வராததால் தினமும் என்னை அடித்தார். நான் 02.11.2015 அன்று காவல்நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் மனு நான் கொடுத்த புகார்மனுதான் ( அந்த புகார்மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது ). இந்த வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தனர்.

.......... 2

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**எதிரிதரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞருக்கு குறுக்கு விசாரணை செய்ய போதிய கால அவகாசம் அளித்தும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை சாட்சியம் முடிக்கப்படுகிறது.**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, GUDIYATTAM.**
**Case No.C.C.No.33/2018**

**DEPOSITION OF WITNESS FOR PW.2**

| | | | |
|---|---|---|---|
| **Name** | ALLAHBAKASH | **Caste** | |
| **Father / Husband Name** | **RAFEEQUE AHMED** | **Occupation** | ELECTRICIAN |
| **Village** | **376, OLD BANGALORE, BANGALORE** | **Religion** | **MUSLIM** |
| **Taluk** | **BANGALORE, KARNATAKA** | **Age** | **37** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.09.2022.**

## முதல் விசாரணை

1. நான் பெங்களுருவில் எலக்ட்ரீஷியனாக வேலை செய்கிறேன். அ.சா.1 எனது தங்கை ஆவார். வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். தாஜீதின் எனது தங்கையின் கணவர் ஆவார். 2 வது எதிரி அஜீஸ் எனது தங்கையின் மாமனார் ஆவார்.

2. 04.03.2010 அன்று எனது தங்கைக்கும் முதல் எதிரி தாஜீதினுக்கும் குடியாத்தத்தில் உள்ள திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெற்றது. திருணத்திற்கு 16 சவரன் தங்க நகைகளும், 2 சவரன் மாப்பிள்ளைக்கும், ரூபாய் 2,00,000/- ரொக்கமாகவும், வண்டிக்கு ரூபாய் 50,000/-மும் கொடுத்தோம்.

3. 08.09.2015 அன்று நானும் எனது தங்கையும் எதிரிகளின் வீட்டிற்கு சென்றோம். அப்போது முதல் எதிரி தாஜீதின் ரூபாய் 5,00,000/- பணம் கேட்டார். பணம் கொடுக்கவில்லை என்றால் என் தங்கையிடம் நீ இங்கு வந்து வாழ முடியாது என்று கூறினார். நீ போலீசிடம் போ அல்லது வேறு எங்கு வேண்டுமானாலும் போ நான் கட்சியில்தான் உள்ளேன் என்னை ஒன்றும் செய்ய முடியாது என்று சொன்னார்.

4. அதன்பிறகு நாங்கள் எங்கள் வீட்டிற்கு திரும்பிவிட்டோம். புகார் அளிக்கும்போது நான் எனது தங்கையுடன் காவல்நிலையத்திற்கு சென்றேன். இந்த வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

எதிரிதரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞருக்கு குறுக்கு விசாரணை செய்ய போதிய கால அவகாசம் அளித்தும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை சாட்சியம் முடிக்கப்படுகிறது.

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, GUDIYATTAM.**
**Case No.C.C.No.33/2018**

**DEPOSITION OF WITNESS FOR PW.3**

| | | | |
|---|---|---|---|
| **Name** | BABU | **Caste** | |
| **Father / Husband Name** | **UBAYADHULLA** | **Occupation** | **BEEDI WORK** |
| **Village** | **KOSHA GULAMUDDIN STREET, DHARNAMPET** | **Religion** | **MUSLIM** |
| **Taluk** | **GUDIYATHAM** | **Age** | **52** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.09.2022.**

**முதல் விசாரணை**

**1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் பீடி வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கின் அ.சா.1 ரேஷ்மாவை எனக்கு தெரியும். அ.சா.1 ரேஷ்மா எனது உறவினர் ஆவார். அ.சா.1 ரேஷ்மாவுக்கும் முதல் எதிரி தாஜீதினுக்கும் திருமணம் நடைபெற்றது.**

**2. 04.03.2010 அன்று ரேஷ்மாவுக்கும் முதல் எதிரி தாஜீதினுக்கும் கஸ்பாவில் உள்ள சீனிவாசா கல்யாண மண்டபத்தில் திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு 18 சவரன் நகை, ரூபாய் 2,00,000/- ரொக்கம், மற்றும் இருசக்கர வாகனம் வாங்குவதற்கு ரூபாய் 50,000/- ஆகியவை கொடுக்கப்பட்டது.**

**3. முதல் எதிரி தாஜீதின் வெளிநாடு செல்வதற்காக ரூபாய் 5,00,000/- ஐ ரேஷ்மாவின் தகப்பனாரிடம் கேட்டார். அதனால் அவர்களுக்குள் பிரச்சினை ஏற்பட்டது. முதல் எதிரி தாஜீதின் அ.சா.1 ரேஷ்மாவிடம் ரூபாய் 5,00,000/- வாங்கிவரவேண்டும் என்றும் இல்லையென்றால் வேறு பெண்ணை திருமணம் செய்ய போவதாக கூறினார். பின்பு முதல் எதிரி ரேஷ்மாவை தனியாக விட்டு விட்டார்.**

**4. முதல் எதிரி தாஜீதினுக்கு வேறு திருமணம் நடைபெற்று ஒரு குழந்தை உள்ளது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.**

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**1. போலீசார் என்னை எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் முன்பே விசாரணை செய்தார்கள். போலீசார் என்னிடம் வீட்டிலும் விசாரணை செய்தார்கள் மற்றும் காவல்நிலையத்திலும் விசாரணை செய்தார்கள்.**

2. சம்பவம் எனக்கு நேரடியாக தெரியும். போலீசார் விசாரித்தபோது முதல் விசாரணையில் கூறிய சங்கதியைத்தான் கூறினேன். நான் சம்பவத்தை கேள்விப்பட்டுத்தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் எனக்கு தெரியும்.

3. எதிரிகள் வரதட்சணையாக ரூபாய் 5,00,000/– ஐ எந்த தேதியில் கேட்டார்கள் என்றால் தேதி நினைவில்லை.

4. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் அ.சா.1 க்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.